84—

கால்நடைத் தீவனங்கள் விற்பனை மையம்

***50148—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்துக் கிராமங்களிலும் வைக்கோல் மற்றும் கால்நடைத் தீவனங்கள் விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடைத் தீவனங்கள் விற்பனை மையத்தை கூடுதலாக அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதுவரையில், எந்த ஒரு ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு, வாக்களித்த மக்களுக்காக மட்டுமல்லாமல், வாயில்லா ஜீவன்களுக்காகவும் பல்வேறு திட்டங்களைத் தந்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே, தீவனப் பற்றாக்குறை ஏற்படும் காலங்களிலும் தனியாரிடமிருந்து தீவனத்தைக் கொள்முதல் செய்து, கால்நடை பராமரிப்புத் துறைமூலம் தீவனக் கிடங்குகளை ஏற்படுத்தி, மானிய விலையில், கிலோ 2 ரூபாய் என்ற வீதத்தில் கால்நடைகளை வளர்ப்போருக்கு உலர் தீவனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில், 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சென்னையைத் தவிர ஏனைய மாவட்டங்களிலே 201 தீவனக் கிடங்குகளை அமைத்து, கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு 31 இலட்சத்து 335 மெட்ரிக் டன் உலர் தீவனம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 12,31,000 கால்நடைகள் பயன்பெற்றுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கூடுதலான விற்பனை மையங்களை அமைக்கும் அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 பிப்ரவரி 19]

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

85—

பஞ்சாலை

*__44793—திரு. ம. குணசேகரன்:__

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பஞ்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் பஞ்சாலை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார்கள். சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் புதிய பஞ்சாலை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்ற தாரக மந்திரத்தோடு ஏழையெளிய மக்களுக்காக, விவசாயப் பெருங்குடி